

சாதி ஒழிப்பே ! சமூக விடுதலை !!

# ஆதித்தமிழர் பேரவை

தமிழ்நாடு




இரா. அதியமான்

நிறுவனர்


நாள் : 23-04-10

அன்பிற்கினியீர், வணக்கம்

காலம், காலமாக அழுத்தி, அடிமுட்டையாக வைக்கப்பட்ட மக்களை தன்னுணர்வூட்டி, தன்மானத்துடன் வாழ வழிவகை செய்யும் வகையில் தமிழ்நாட்டின் வரலாற்றில் **முதல் அடியெடுத்து வைத்து** மக்களை ஒன்றுதிரட்டுகிற பணியில், ஆதித்தமிழர் பேரவை **செருப்பு தைப்போர் மறு வாழ்வு மாநாட்டை,** வெகு எழுச்சியுடன் ஈரோட்டில் நடத்தி முடித்துள்ளது.

இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், பல்வேறு முற்போக்கு பேசும், சக்திகளையும், சிந்திக்க வைத்துள்ளது. இழிவு ஒழிப்பு என்பதை மையமாக வைத்து இயங்கும் அமைப்பான ஆதித்தமிழர் பேரவை எப்படி முதன்முதலாக கையால் மலம் அள்ளும் தொழிலை ஒழிக்க மாநாடு நடத்தி தீர்மானம் 2004 ல் நிறைவேற்றியதோ, அதே போல இன்று 2010 ல், பழைய செருப்புகளை வீதியோரங்களில் அமர்ந்து தைக்கும் முறையை ஒழிக்க, தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இத்துடன் நிற்காமல் இம்மக்களின் மறு வாழ்வுக்கான பரிந்துரைகளையும் தெளிவுபடுத்தியுள்ளது. அந்த வகையில தெருவோரங்களில் அமர்ந்து பணியாற்றும் மக்களின் புள்ளிவிவரங்களையும், திரட்டி, இதன்மீது நடவடிக்கை எடுக்க, மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தி வருகிறது.

இப்பணிகளை திறம்பட தொகுத்து வழங்கிய தோழர்கள் அமைப்புச்செயலாளர் சித்தார்த்தன், மற்றும் தொழிலாளர் பேரவையின் தலைவர் எழில்புத்தன் ஆகியோருக்கு எனது பாராட்டுக்களை தெருவித்து, இத் தொகுப்பு அரசுக்கும், மக்களுக்கும், பயன்படும் என கருதுகிறேன்.

ஆதித் தமிழர் பேரவை
கோவை
641 041.
தலைமையகம்

அருந்ததியர் விடுதலைப்பணியில்
இரா. அதியமான்
(நிறுவனர்)


தலைமையகம் : அ-7, சக்தி அடுக்ககம், மாவீரர் நகர், வடவள்ளி, கோவை - 641 041.

பேசி : 0422 - 2424721, 94430 - 84642 மின்னஞ்சல் : adhiyamaanperavai@gmail.com